டாக்டர் சிவ. விவேகானந்தன் கன்னியாகுமரி மாவட்டம் நாகர் கோவிலைச் சார்ந்தவர். தில்லிப் பல்கலைக்கழகத்து ஸ்ரீவெங்கடேஸ்வரா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர், கன்னியாகுமரி மாவட்டம் தொடர்பாகப் பல நூல்களைப் படைத்துள்ளார்.

அவற்றுள் சில, குமரிநாட்டுக் கோட்டைகளும் கொட்டாரங்களும், தம்பிமார் வரலாறு, நாகராஜா கோவில், குமரிநாட்டில் சமணம்: தோற்றம் வளர்ச்சி வீழ்ச்சி, அய்யா வைகுண்டர் வாழ்வும் வழிபாடும், சிதரால் திருச்சாரணத்துமலை சமணப்பள்ளி, ஆவிகள் பூதங்கள் பேய்கள், நாகர் வரலாறு முதலியன.

மேலும் அவர் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட கதைப்பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். பெண்ணரசு காவியம், பார் பதியம்மன் கதை, வலைவீசு காவியம், குருக்கேத்திரன் கதை, செங்கிடாக்காறன் கதை, பிரமசக்தியம்மன் கதை, பூதங்களின் கதை என்பன அவற்றுள் சில. அவற்றில் அயோத்திராமாயணம் என்னும் பதிப்பு நூலுக்காக 2011 ஆம் ஆண்டில் சிறந்த நூலுக்கான பரிசைத் தமிழக அரசிடமிருந்து பெற்றார்.

மேலும் வள்ளிநாடகம் என்னும் நாட்டுப்புற நாடகத்தைப் பதிப்பித் ததோடு, நீதி வெண்பாவுக்கு உரையெழுதி அதனையும் வெளியிட்டுள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தில் தோன்றிய செய்யுள் வடிவிலான பாகவதப் பாரதம் என்னும் காப்பியத்தை ஓலைச்சுவடியிலிருந்து படியெடுத்து அதன் கதையைப் 'பாகவதப் பாரதம்: உரைநடைக் காப்பியம்' என்னும் நூலாகவும்; செய்யுள் வடிவிலான மூல காப்பியத்தை ஆராய்ச்சி முன்னுரையுடன் "பாகவதப் பாரதம் ஆராய்ச்சிப் பதிப்பு" என்னும் நூலாகவும் வெளியிட்டார்.



பல்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பே பண்பாட்டு விழுமியங்கள்' என்னும் இந்நூல் ஆகும்.

காவ்யா

பண்பாட்டு விழுமியங்கள் டாக்டர் சிவ. விவேகானந்தன் காவ்யா

காவ்யா

# பண்பாட்டு விழுமியங்கள்

## CULTURAL VALUES

டாக்டர் சிவ. விவேகானந்தன்